# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2012 ஆகஸ்ட் திங்கள் 31.08.2012–ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய கடைகள், கலைஞர் கருணாநிதி வணிக வளாகம், மற்றும் கவியரசு கண்ணதாசன் வணிக வளாகத்தில் அமைந்துள்ள கீழ்கண்ட கடைகளுக்கான உரிமம் முடிவடைந்துவிட்டபடியால், மூன்றாண்டுகளுக்கு நீட்டிப்பு செய்யவும், தற்போதைய மாத வாடகையில் 15% உயர்வு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | கடை எண். | உரிமதாரர் பெயர் | உரிமம் முடிவடையும் காலம் | தற்போதைய வாடகை ரூ. | 01.07.2012 முதல் 30.06.2015 முடிய வாடகை – ரூ. |
|---|---|---|---|---|---|
| **31.01.2012 மற்றும் 30.06.2012–உடன் உரிமம் முடிவடையும் கடைகள்** | | | | | |
| 1 | 23 | திரு. டிகால் | 01.02.2012 முதல் 31.01.2015 முடிய. | 596 | 685 |
| 2 | 39 | திரு.சி.எஸ்.ராஜ் | 01.07.2012 முதல் 30.06.2015 முடிய. | 550 | 632 |
| 3 | 4 | திரு.முகம்மது அப்துல் நாசர் | “ | 1520 | 1748 |
| 4 | 1 | திருமதி. நிர்மலா | “ | 1530 | 1759 |
| **30.07.2012–உடன் உரிமம் முடிவடையும் கடைகள்** | | | | | |
| 5 | 2 | திருமதி. நிர்மலா | 01.08.2012 முதல் 30.07.2015 முடிய. | 1525 | 1754 |
| 6 | 3 | திரு. ஜெகதீஷ் | “ | 1520 | 1748 |
| 7 | 4 | திரு.சபீக் அகமது | “ | 1525 | 1754 |
| 8 | 5 | திரு.ஞானசேகர் | “ | 1520 | 1748 |
| 9 | 6 | திருமதி. பாத்திமா | “ | 1520 | 1748 |
| 10 | 7 | திருமதி. கிளாடி | “ | 1530 | 1759 |
| 11 | 8 | திரு.பால்தாஸ் | “ | 1515 | 1743 |
| 12 | 9 | திரு.பால்தாஸ் | “ | 1920 | 2208 |
| 13 | 25 | திரு.பால்தாஸ் | “ | 1520 | 1748 |
| 14 | 10 | திருமதி. அஜிதா | “ | 1920 | 2208 |
| 15 | 11 | திருமதி. அஜிதா | “ | 1925 | 2214 |
| 16 | 5 | திரு யூசுப் | “ | 1520 | 1748 |
| 17 | 6 | திரு. சுல்தான் | “ | 1530 | 1759 |
| 18 | 7 | திரு. சுல்தான் | “ | 1520 | 1748 |
| 19 | 12 | திருமதி. கலைச்செல்வி | “ | 1520 | 1748 |

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.அ1/2035/2002)

**தீர்மானம் எண்.322 . ஒத்திவைக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சிக்குட்பட்ட தினசரிச்சந்தை வளாகத்தில் அமைந்துள்ள கலைஞர் கருணாநிதி வணிக வளாகத்தில் அமைந்துள்ள கடை எண்கள் 33 முதல் 37 மற்றும் 60 முதல் 64 ஆகியவற்றில் இயங்கி வரும் BSNL அலுவலகத்திற்கான வாடகை உரிமம் 30.06.2012 மாதத்தோடு முடிவடைகிறது. மேலும் வாடகை உரிமத்தை மூன்றாண்டுகளுக்கு நீட்டிப்பு செய்ய 01.07.2012 முதல் 30.06.2015 வரை 15% வாடகை உயர்வு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

| கடை எண்கள் | வாடகைதாரர் பெயர் | தற்போதைய வாடகை ரூ. | 15% உயர்வு செய்யப்பட வேண்டிய தொகை ரூ. |
|---|---|---|---|
| 23 முதல் 37 வரை<br>60 முதல் 64 வரை | BSNL அலுவலகம் | 5620/– | 6463/– |

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.அ1/4430/2007)

**தீர்மானம் எண்.323 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 15–வது வார்டில் புனித மேரி தொடக்கப்பள்ளி அருகாமையில் பொதுமக்கள் பயன்படுத்தும் வழிப்பாதையில் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள மின்கம்பங்களை (மின்கம்ப எண். FII/11, FII/12) மாற்றி அமைப்பதற்கும், மதிப்பீட்டு கட்டணம் ரூ.30,255/–ஐ செலுத்த கேட்டு தமிழ்நாடு மின்சார வாரியத்திடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று மேற்படி தொகையினை செலுத்திய விவரம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ2/2568/2012)

**தீர்மானம் எண்.324 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 7–வது வார்டு சிங்காரவேலன் காலனி நகர புல எண்.D2-32–ல் உள்ள 1.750 சென்ட் இடத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வேண்டி பொது சாலை அமைப்பதற்கு திரு.றப்பேல் அவர்கள் மகன்(1) திரு.ஆர்.ஜாண்சன், மரமடி, (2) திரு.சீமோன் அவர்கள் மகன் திரு.டேவிட், துறைமுகத்தெரு, திரு.எம்.தொபியாஸ் அவர்கள் மகன் திரு.T.எடிசன், சிங்காரவேலன் காலனி ஆகியோர்கள் சேர்ந்து நகராட்சி ஆணையாளர் அவர்கள் பெயரில் நன்கொடை பத்திரம் 1234/2012–ன்படி நன்கொடை பத்திரம் எழுதி கொடுத்துள்ளனர். மேற்படி இடத்தினை நகராட்சிக்கு சொந்தமாக ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.tpi/2479/2012)

**தீர்மானம் எண்.325 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

நகராட்சிகளில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகளை e-tendering முறையில் பெறுவதற்கு குறைந்தது இருவருக்கு Digital Signature Card இருத்தல் வேண்டும். இந்நகராட்சியில் பொறியாளர் மற்றும் பொதுப்பணி மேற்பார்வையாளருக்கு மேற்படி கார்டு உள்ளது. அதில் பொதுப்பணி மேற்பார்வையாளரின் Digital Signature Card 14.07.2012–வுடன் காலாவதியாகி விட்டதால் அதனை புதுப்பிப்பதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.2,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/280/2010)

**தீர்மானம் எண்.326 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கான Xerox Machine பழுதடைந்து விட்டதால் அவசர அவசியம் கருதி வருடாந்திர பராமரிப்பு பணிகளுக்காக (AMC) உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து நேரடியாக விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | M/S.Friends Grafix Copier Service,<br>7-A, Classic Complex,<br>181, Balamore Road,<br>Opp.Anna Stadium, Nagercoil-1. | : Rs. 6,000/- |
| 2 | M/S.Indiya Xerox,<br>No.433, K.P.Road, Mohan Building,<br>Chettikulam Junction, Nagercoil-1. | : Rs. 7,000/- |
| 3 | M/S.Diayano Copier Service,<br>Near Nagarajan Hospital,<br>Opp.Anna Stadium, Nagercoil-1. | : Rs. 7,500/- |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் M/S.Friends Grafix Copier Service, Nagercoil நிறுவனத்தின் ரூ.6,000/— க்கான குறைந்த விலைப்புள்ளியை ஏற்பதற்கு இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :**

1) உத்தேச செலவுத் தொகை ரூ.6,000/—க்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து நேரடியாக பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/S.Friends Grafix Copier Service, Nagercoil- நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்பதற்கு இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/7053/2011)

**தீர்மானம் எண்.327 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கதவு எண்கள் 7/36.எ, 1/99.பி. ஆகிய வீடுகளின் குடிநீர் குழாய் இணைப்புகள் வரி நிலுவை இருந்த காரணத்தினால் குடிநீர் குழாய் இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டது. தற்போது மனுதாரர்கள் வரி நிலுவை முழுவதையும் செலுத்தி விட்டு குடிநீர் குழாய் இணைப்பு வழங்க கோரியுள்ளார்கள். எனவே மீண்டும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.அ1/2042/2007)

**தீர்மானம் எண்.328 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு 19 ஆழ்துளை கிணறுகளிலிருந்து மின்மோட்டார் மூலம் 10 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் ஏற்றப்பட்டு பிளீச்சிங் பவுடர் கலக்கப்பட்டு தினந்தோறும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது 2012—13—ம் ஆண்டிற்கு பிளீச்சிங் பவுடர் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.50,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.1110/2012/இ1 )

**தீர்மானம் எண்.329 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 10–வது வார்டில் துறைமுகத் தெருவில் கதவு எண்.11/45–ல் வரி நிலுவைத் தொகை இருந்த காரணத்தினால் 19.11.2004 அன்று குடிநீர் குழாய் இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டது. தற்போது மனுதாரர் மேற்கண்ட கதவு எண்ணுக்கு உரிய நிலுவைத் தொகை முழுவதையும் செலுத்தி விட்டு மீண்டும் இணைப்பு வழங்க கோரியுள்ளார். எனவே மனுதாரர் வேண்டுகோளை ஏற்று மீண்டும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.3356/2012/இ2)

**தீர்மானம் எண்.340 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 20–வது வார்டு இலப்பவிளையில் கதவு எண்.20/76–ல் உள்ள குடிநீர் குழாய் இணைப்பை மனுதாரர் தற்காலிகமாக துண்டிக்க கோரியுள்ளார். மேலும் மனுதாரரின் கட்டிடத்தின் மீது நிலுவை ஏதும் இல்லை. எனவே மனுதாரரின் வேண்டுகோளின்படி மேற்கண்ட கதவு எண்ணில் உள்ள குடிநீர் குழாய் இணைப்பை துண்டிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2843/2012/இ2)

**தீர்மானம் எண்.341 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

இந்நகராட்சியில் மேற்கொள்ளப்படும் திட்டப்பணிகள் தொடர்பான விளம்பரத்தை தினபூமி நாளிதழின் தமிழக அரசின் ஓராண்டு சாதனை மலரில் வெளியிட்ட வகையில் ரூ.20,000/–ஐ செலுத்த கேட்டு தினபூமி நாளிதழ், மதுரை அலுவலகத்திலிருந்து பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை செலுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/7053/2011)

**தீர்மானம் எண்.342 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20–ல் செட்டிவிளை வடிகால் ஓடையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் மூடு சிலாப் அமைக்கும் பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,30,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண். 287, நாள் 29.06.2012–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 08.08.2012–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் பெறப்படாததால் 24.08.2012–ல் மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு.,

| | | |
|---|---|---|
| 1. | திரு.S.ஜான்றோஸ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.31% குறைவு.<br>(ரூ. 1,21,621/– ) |
| 2. | திரு.C. செல்லநாடார்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 1.64% அதிகம்.<br>(ரூ. 1,24,005/– ) |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.31% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.S.ஜான்றோஸ், ஒப்பந்தத்தாரரின், ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2667/2012/இ1)

**தீர்மானம் எண்.343 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

இந்நகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் பழுதடைந்துள்ள சுவிஸ் வால்வுக்கான பழுது நீக்கம் செய்தல் மற்றும் பொருத்துதல் பணிக்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.62,000/—க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண். 291, நாள் 29.06.2012—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 08.08.2012—ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் பெறப்படாததால் 24.08.2012—ல் மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட **0.68%** குறைவு. |
| 2. | திரு.பி.தங்கமணி, ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட **1.89%** அதிகம். |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட **0.68%**குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சி.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரரின், ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.2573/2012/இ2)

**<u>தீர்மானம் எண்.344 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.</u>**

**பொருள் எண். 14**

இந்நகராட்சிக்குட்பட்ட வெள்ளிப்பிள்ளையார் கோவில் ஆழ்துழாய் கிணறு எண்.13—ல் பேனல் போர்டு கேபிள் இணைத்தல் மற்றும் ஆழ்துழாய் கிணறு எண்.20—ல் போர் பிட் மற்றும் மூடி அமைத்தல் ஆகிய பணிகளுக்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.60,000/—க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண். 290, நாள் 29.06.2012—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 08.08.2012—ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் பெறப்படாததால் 24.08.2012—ல் மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட **0.21%** குறைவு. **(ரூ.56,088/— )** |
| 2. | திரு.பி.தங்கமணி, ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட **2.01%** அதிகம். **(ரூ.57,332/—** |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட **0.21%** குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சி.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரரின், ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.2614/2012/இ2 )

**<u>தீர்மானம் எண்.345 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.</u>**

**பொருள் எண். 15**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7—ல் அந்தோணியார் காலனி பொது கழிப்பிடம் அருகில் அமைந்துள்ள மீனவர் ஓய்வறையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுவதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.45,000/—க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண். 271, நாள் 31.05.2012—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 08.08.2012—ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் பெறப்படாததால் 24.08.2012—ல் மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட **0.40%** குறைவு. **(ரூ. 42,054/—)** |
| 2. | திரு.பி.தங்கமணி, ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட **2.64%** அதிகம். **(ரூ. 43,341/— )** |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.40% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சி.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரரின், ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2252/2012/இ1)

**தீர்மானம் எண்.346 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 16**

பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2012–13–ன்கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட புனித மேரி மேல்நிலை மற்றும் தொடக்கப்பள்ளிகளுக்கு 4 எண்ணங்கள் கணனி மற்றும் அதற்கான உபகரணங்களை வாங்கி பொருத்துவதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் நடவடிக்கைகள் செ.மு.எண்.1946/12/ஆ3 நாள் 12.06.2012–ன் மூலம் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி DGS&D விலையில் ரூ.1,13,400/– செலவில் 4 கணனிகள் வாங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் மீதமுள்ள தொகை ரூ.36,600/–ல் கணப்பொறி மேஜை, நாற்காலி, மின்கலப் பெட்டி (UPS) மற்றும் ஒயரிங் பணிகள் மேற்கொள்வதற்காக 24.08.2012–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.28% குறைவு. (ரூ.35,900/–) |
| 2. | திரு.சி.தேவகரின் சேம், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 11.11% கூடுதல். (ரூ. 40,000/–) |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.28% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரரின், ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2012/2012/இ1)

**தீர்மானம் எண்.347 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 17**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள வடிகால் ஓடைகளில் ஏற்படும் அடைப்புகளை சரி செய்வதற்கும், குடிநீர் குழாய் பதிப்பதற்காக தோண்டப்படும் சாலைகள் மற்றும் வடிகால் ஓடை ஆகியவற்றில் ஏற்படும் உடைவுகளை சரி செய்வதற்காகும் வருட பராமரிப்பு மதிப்பீட்டுத் தொகை ரூ.2,50,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.225, நாள் 30.04.2012–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 06.06.2012–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் பெறப்படாததால் 24.08.2012–ல் மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.02% குறைவு. |
| 2. | திரு.பி.தங்கமணி, ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.18% அதிகம். |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரரின், ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1744/2012/இ1)

**தீர்மானம் எண்.348. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 18**

இந்நகராட்சிக்குட்பட்ட புளியமூட்டுவிளை முதல் செட்டிவிளை வரை புதிதாக 3" பிவிசி குடிநீர் வினியோக குழாய் அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.50,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண். 261, நாள் 31.05.2012–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 24.08.2012–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.பி.தங்கமணி, ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 2.42% அதிகம். (ரூ.49,925/–) |
| 2. | திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.53% அதிகம். (ரூ.48,485/– ) |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.53% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சி.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரரின், ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.1744/2012/இ2 )

**தீர்மானம் எண்.349 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.19**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு மினி லாறி எண். TN.74 -Z-8931–ன் மின்கலம் பழுதடைந்துள்ளதால் அதனை சரிசெய்வதற்கு 29.06.2012–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் எவரும் கலந்து கொள்ளாததால் பொதுசுகாதாரப் பணி அவசர அவசியம் கருதி துறை மூலமாக பணி மேற்கொள்ளப்பட்டு பழைய மின்கலம் ரூ.1,500/–க்கு கொடுத்து புதிய மின்கலம் ரூ.8,500/– மாற்றி அமைக்கப்பட்டு அதற்கான தொகை ரூ.7,000/– வழங்கப்பட்டது. எனவே பணி மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.எச்1/4739/2008)

**தீர்மானம் எண்.350 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 20**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் குப்பை அள்ளும் தள்ளுவண்டிகள் 5–ன் சக்கரத்தின் பேரிங் வெல்டிங் சரி செய்ய பொது சுகாதாரப் புணி அவசர அவசியம் கருதி நகராட்சி சட்ட விதி 15–ன்கீழ் மேற்காணும் பணியினை மேற்கொள்ளப்பட்டு அதற்கான தொகை ரூ.2,000/– வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணி மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.எச்1/1388/2009)

**தீர்மானம் எண்.351 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 21**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மினி லாரி எண். TN.74.Z-2339 –க்கு தகுதி சான்று பெறுவதற்கு கீழ்காணும் பழுதுகள் சரி செய்ய ஆகும் உத்தேச செலவு மதிப்பீடு ரூ. 26,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1) புள் சர்வீஸ் கிரீஸ்
2) புள் பெயிண்டிங் ஒர்க்ஸ்
3) முன்புற கேபிள் பின்புறம் தொட்டியில் பேச் ஒர்க் செய்தல்
4) நான்கு வீல்களிலும் பிரேக் பக்கட்டுகள் மாற்றுதல்
5) ஜாயின்ட் ஸ்டார்கள் 3 மாற்றுதல்
6) சென்டர் ஜாயின்ட் பூட்டு மாற்றுதல்
7) யோக்கு, டீத்து இரண்டும் மாற்றுதல்

8) ஒயரிங் செக்கப் செய்து தேவையான லைட், பல்பு மாற்றுதல்.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.எச்1/4008/2010)

**தீர்மானம் எண்.352 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 22**

குளச்சல் நகராட்சியின் மக்கள் தொகை 2011–ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 23155, பரப்பளவு 5.18 சதுர கி.மீ. ஆகும். 24 வார்டுகளை கொண்ட இந்நகரில் 306 குடியிருப்புகள் உள்ளது. அரசு நிர்ணயித்த 50 துப்புரவு பணியிடங்களில் தற்போது 45 துப்புரவு பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். 5 பணியிடங்கள் காலியாக உள்ளது. அதில் குடிநீர் பிரிவிற்கு **10**, அலுவலக பணிக்கு **4**, வருவாய் பிரிவிற்கு **4**, ஓட்டுநர் பணிக்கு **2**, தெருவிளக்கு பிரிவிற்கு **1**, மற்றும் இரவு காவலர் பணிக்கு **1** என மாற்றுப்பணிக்கு **22** துப்புரவு பணியாளர்கள் போக மீதம் உள்ள **23** துப்புரவு பணியாளர்களை கொண்டு பொது சுகாதாரபிரிவில் உள்ள **3** மினி லாரிகள் மூலம் குப்பைகள் அகற்றும் பணி, கொசு மருந்து அடிக்கும் பணி **24** வார்டுகளிலும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வீடு வீடாக குப்பைகளை சேகரிக்கும் பணி, கழிவு நீர் ஓடை சுத்தம் செய்தல் மற்றும் தெரு சுத்தம் செய்யும் பணிகள் ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. **23** துப்புரவு பணியாளர்களை கொண்டு நகரின் பொது சுகாதாரம் மற்றும் துப்புரவு பணிகளை முழுமையாக செய்ய இயலாத காரணத்தால் இந்நகராட்சியில் காலியாக உள்ள **4** துப்புரவு பணியாளர்களுக்கான மாதாந்திர ஊதிய தொகையில் ஒப்பந்த அடிப்படையில் **6** துப்புரவு பணியாளர்களை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.அ**1/11092/2010**. நாள்.**25.6.2010**–ன்படி நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.**200/**– வீதம் **30** நாட்களுக்கு ரூ.**6000/**– ஊதியத்தில் பணிக்கு அமர்த்தி இந்நகராட்சிக்குட்பட்ட **2, 3**, மற்றும் **4** ஆகிய வார்டுகளில் துப்புரவு பணிகளை மேற்கொள்ள இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.**1688** நாள் **29.07.2011**–ன் மூலம் ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.A.P.வாரன், ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு ஒப்பந்த அடிப்படையில் **6** பணியாளர்களை கொண்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஊதியமும் வழங்கப்பட்டது.

தற்போது மேற்படி அனுமதியானது **17.08.2012**–ல் முடிவடைந்துவிட்டதாலும், **31.07.2012**–ல் மேலும் ஒரு துப்புரவு பணியாளர் பணியிடம் காலியாகியுள்ளதாலும், **18.08.2012** முதல் **17.08.2013** வரையிலான ஓராண்டிற்கு, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.அ**1/13963/2011**, நாள்.**27.07.2011**–ன்படி நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.**275/**– வீதம் **26** நாட்களுக்கு **7** பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்தவும், அதற்கான ஊதியத் தொகையினை இந்நகராட்சியில் காலியாக உள்ள **5** துப்புரவு பணியாளர்களின் ஓராண்டு ஊதியத் தொகை ரூ.**6,35,220/**–க்கு மிகாமல் வழங்கவும், மேற்படி பணியினை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்வதற்கு குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு, நகரின் பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டும், மேற்படி பணிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/12622/09)

**தீர்மானம் எண்.353 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 23**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் மற்றும் அமைச்சர், நகர்மன்றத் தலைவர் ஆகியவர்களின் அறிவுரைப்படி சிக்குன் குனியா, டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள புகை மருந்து அடிக்க பயன்படுத்தும் பைரித்திரம் **2%** எக்ஸ்ட்ராக்ட் மருந்து தற்போது இருப்பில் இல்லாததால் துணை இயக்குநர் அலுவலகம் மற்றும் யானைக்கால் நோய் தடுப்பு அலுவலகம், நாகர்கோவிலில் கோரியதில் தற்போது இருப்பில் இல்லை என பூச்சியியல் உதவியாளர் அவர்கள் மூலம் தெரிவிக்கப்பட்டது. எனவே டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கை அவசர அவசியம் கருதி தற்போது 200 லிட்டர் பைரித்திரம் **2%** எக்ஸ்ட்ராக்ட் TNMSC அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து வாங்க தோராயமான செலவினம் (பைரித்திரம் **2%** எக்ஸ்ட்ராக்ட் லிட்டர் ஒன்றிற்கு ரூ.**597/**– வீதம்

200 லிட்டருக்கு ரூ.1,20,000/–) :ரு.1,20,000/–க்கு (ரூபாய் ஒரு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) நகர்மன்ற தலைவரின் முனுஅனுமதி பெறப்பட்டுள்ளமைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.h1/349/2010)

**தீர்மானம் எண்.354 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 24**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கும் பொருட்டு நகராட்சி பகுதியில் உள்ள கால்வாய்கள் மற்றும் நீர்நிலைகளில் உள்ள செடி, கொடிகளை அகற்றும் பணிக்காக தினக்கூலி அடிப்படையில் மாவட்ட ஆட்சியாளர் அவர்களின் உத்தரவு ந.க.எண்.அ1/13963/2011 நாள் 27.07.2011–ன்படி, நாள் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு ரூ.275/– வீதம் தினக்கூலி அடிப்படையில் பணியின் அவசர அவசியம் கருதி தேவைப்படும் நபர்களை நகர்மன்ற தலைவர் முன்அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி பெற்றதற்கும், அதில் விலைப்புள்ளி குறைவாக அளித்துள்ள திரு.தா.ஜான் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்ததாரர், நபர் ஒருவருக்கு ரூ.275/– என்ற விகிதத்தில் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்பதற்கும், பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** : சுகாதாரப் பணிகள் பணி அவசரம் கருதி, உள்ளூர் விலைப்புள்ளி பெற்றமைக்கும், நகர்மன்ற தலைவர் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/1982/2012)

**தீர்மானம் எண்.355 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஓம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2012 ஆகஸ்ட் திங்கள் 31.08.2012–ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

இந்நகராட்சிக்கு 2012–2013–ம் ஆண்டிற்கு தேவையான எழுது பொருட்கள், படிவங்கள், பதிவேடுகள் வாங்க மன்றத் தீர்மானம் எண். 242 நாள் 31.05.2012–ன்படி ரூ.5,00,000/–க்கு அனுமதி வழங்கியதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனத்தார் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளனர்.

| | |
|---|---|
| 1 | திருநெல்வேலி கூட்டுறவு அச்சகம் லிட், திருநெல்வேலி–6. |
| 2 | கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு அச்சகம் லிட், எண்.ஒய்.218, தக்கலை. |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.2–ல் கண்ட நிறுவனத்தார் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்று, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்தாருக்கு விநியோக உத்திரவு வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். /2012/எச்1)

**தீர்மானம் எண்.356 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சிக்குட்பட்ட முக்கிய சாலைகளில் சீராக ஒளிரும் வழிகாட்டும் சாலை குறியீடுகள் அமைப்பதற்கு மான்ய கோரிக்கை அறிவிப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில், சீராக ஒளிரும் வழிகாட்டும் சாலை குறியீடுகள் அமைக்க கீழ்க்காணும் இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

(1) நகராட்சி அலுவலகம்
(2) பேரூந்து நிலையம்
(3) தினசரிச்சந்தை
(4) தொலைபேசி நிலைய அலுவலகம்
(5) தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பணிமனை
(6) அரசு மருத்துவமனை

எனவே மேற்காணும் இடங்களில் சீராக ஒளிரும் வழிகாட்டும் சாலை குறியீடுகள் அமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 231/2012/இ1)

**தீர்மானம் எண்.357 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்குட்பட்ட பொது இடங்களில் மாற்று திறனாளிகளுக்கு தடையில்லா சூழல் உருவாக்கும் பொருட்டு கழிப்பறைகள் கட்டுவதற்கு மான்ய கோரிக்கை அறிவிப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதால், ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் கழிப்பறைகள் கட்டுவதற்கு கீழ்க்காணும் இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

(1) நகராட்சி அலுவலக வளாகம்
(2) டாக்டர் அம்பேத்கார் தினசரிச்சந்தை வளாகம்
(3) பேரூந்து நிலைய வளாக கட்டண கழிப்பறை
(4) தீயணைப்பு துறை அலுவலகம்.

எனவே மேற்படி இடங்களில் மாற்று திறனாளிகளுக்கான கழிப்பறைகள் கட்டுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1098/2012/இ1)

**தீர்மானம் எண்.358 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்குட்பட்ட 11–வது வார்டு துறைமுகத்தெருவில் கழிவு நீரோடை மற்றும் சிமெண்ட் தளம் உடைந்து கழிவுநீர் வெளியே செல்ல முடியாமல் தேங்கி நிற்பதால் சுகாதாரக் கேடு ஏற்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு மேற்படி தெருவில் கழிவு நீரோடையுடன் கூடிய சிமெண்ட் தளம் அமைப்பதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.3447/2012/இ1)

**தீர்மானம் எண்.359 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சிக்குட்பட்ட 13–வது வார்டில் காணிக்கை மாதா ஐஸ் பிளான்ட்–க்கு நேர் எதிர்பக்கம் உள்ள தெருக்களில் கழிவுநீர் வெளியே செல்ல முடியாமல் தேங்கி நிற்பதால் பொதுமக்களுக்கு நோய் பரவும் அபாயம் உள்ளது. எனவே பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு மேற்படி பகுதியில் கழிவு நிரோடை அமைத்து சிமெண்ட் தளம் அமைப்பதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.3061/2012/இ1)

**தீர்மானம் எண்.360 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சிக்குட்பட்ட மீன்விற்பனைக் கூடம் மற்றும் கலைஞர் கருணாநிதி வணிக வளாக தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலக கழிவறையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் ஆகியவற்றிற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.2,90,000/–க்கு பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று 24.08.2012–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.பி.தங்கமணி,<br>ஒப்பந்தத்தாரர் | 0.16% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு.சி.சந்திரசேகர்,<br>ஒப்பந்தத்தாரர் | 1.66% மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.16% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.பி.தங்கமணி, ஒப்பந்தத்தாரரின், ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.6554/2011/இ2 )

**தீர்மானம் எண்.361 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சிக்குட்பட்ட நகர்மன்றக் கூடத்தில் மைக் செட் மற்றும் தரை விரிப்பு அமைப்பதற்கும், அதற்கான வயரிங் பணிகள் செய்வதற்கும், நகர்மன்றத் தலைவர் அறையில் குளிர்சாதன வசதி செய்தல் ஆகிய பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.2,75,000/—க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.285, நாள் 29.06.2012—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 08.08.2012—ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் பெறப்படவில்லை. எனவே 24.08.2012—ல் மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.24% குறைவு.<br>(ரூ.2,65,125/— ) |
| 2. | திரு.பி.தங்கமணி,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.98% அதிகம்.<br>(ரூ.2,63,150/— ) |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.24% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.2649/2012/இ1 )

**தீர்மானம் எண்.362 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சிக்குட்பட்ட நகர்மன்றத் தலைவர் அறை மற்றும் நகர்மன்றக் கூடம் ஆகியவற்றில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல், நகர்மன்றக் கூடத்தில் உடைந்த நாற்காலிகள் மற்றும் கழிவறை கதவுகள் சரி செய்தல் ஆகியவற்றிற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1,00,000/—க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.200, நாள் 30.03.2012—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 18.04.2012—ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் எவரிடமிருந்தும் ஒப்பந்தப்புள்ளி பெறப்படவில்லை. எனவே 24.08.2012—ல் மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.தேவகரின் சேம்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 1.65% அதிகம்.<br>(ரூ.1,00,378/— ) |
| 2. | திரு.ஆர். ஜாண்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.43% குறைவு.<br>(ரூ.98,324/— ) |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.43% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஆர். ஜாண், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.1370/2012/இ1 )

**தீர்மானம் எண்.363 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பேருந்து நிலையத்தில் பயணிகள் உபயோகத்திற்காக அமைக்கப்பட்டுள்ள பழுதடைந்த நிலையில் உள்ள இருக்கைகளை சரி செய்தல், புதிதாக இரண்டு செட் இருக்கைகள் வினியோகம் செய்தல் மற்றும் பேருந்து நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு கருவியில் ஏற்பட்டுள்ள பழுதினை சரி செய்தல் மற்றும் பாதுகாப்பு கூண்டு அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.55,000/—க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.286, நாள் 29.06.2012—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 08.08.2012—ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் பெறப்படவில்லை. எனவே 24.08.2012—ல் மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.37% குறைவு.<br>(ரூ.51,804/— ) |
| 2. | திரு.பி.தங்கமணி,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 4.68% அதிகம்.<br>(ரூ. 54,436/— ) |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.37% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2648/2012/இ1)

**தீர்மானம் எண்.364 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11—ல் மீன்விற்கும் பிளாட் அருகில் அமைந்துள்ள மீனவர் ஓய்வறையில் சேதமடைந்துள்ள தரையை உடைத்து அப்புறப்படுத்தி விட்டு புதிதாக காங்கிரீட்டால் தரை அமைத்து டைல்ஸ் பதித்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் ஆகியவற்றிற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,00,000/—க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.280, நாள் 29.06.2012—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 08.08.2012—ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் எவரிடமிருந்தும் ஒப்பந்தப்புள்ளி பெறப்படவில்லை. எனவே 24.08.2012—ல் மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.பி.தங்கமணி,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 1.65% அதிகம்.<br>(ரூ. 98,557/— ) |
| 2. | திரு.சி.சந்திரசேகர்<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.16% குறைவு.<br>(ரூ. 96,800/— ) |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.16% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சி.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2610/2012/இ1)

**தீர்மானம் எண்.365 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

இந்நகராட்சிக்குட்பட்ட சாஸ்தான்கரை நடுநிலைப்பள்ளி அருகில் சாஸ்தான்கரை சாலையிலிருந்து சிங்கன்காவு சாலை வரை மூடியுடன் கூடிய வடிகால் ஓடை மற்றும் சிமெண்ட் தளம் அமைத்தல் பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.3,20,000/—க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.281, நாள் 29.06.2012—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 08.08.2012—ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் பெறப்படவில்லை. எனவே 24.08.2012—ல் மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.02% குறைவு. (ரூ.3,13,067/— ) |
| 2. | திரு.பி.தங்கமணி, ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.037% அதிகம். (ரூ. 3,14,305/— ) |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.2609/2012/இ1)

**தீர்மானம் எண்.366 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10—ல் துறைமுகத்தெருவில் இந்தியன் வங்கி முன்புறம் அமைந்துள்ள நூலக கட்டிடத்தில் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுவதற்கு ஏதுவாக மேற்படி கட்டிடத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், மேலும் அதன் அருகில் அமைந்துள்ள பொதுக் கழிப்பிடத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் ஆகியவற்றிற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,80,000/—க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.243, நாள் 31.05.2012—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 27.06.2012—ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் எவரிடமிருந்தும் ஒப்பந்தப்புள்ளி பெறப்படவில்லை. எனவே 24.08.2012—ல் மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.பி.தங்கமணி, ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.45% குறைவு. |
| 2. | திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 1.14% அதிகம். |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.45% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.பி.தங்கமணி, ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.955/2012/இ1)

**தீர்மானம் எண்.367 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜ் பேருந்து நிலைய கழிப்பிடத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,40,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.227, நாள் 30.04.2012–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 24.08.2012–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.47% குறைவு. (ரூ.1,33,132/– ) |
| 2. | திரு.பி.தங்கமணி, ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 1.44% கூடுதல். (ரூ. 1,35,688/– ) |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.47% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.1425/2012/இ1 )

**தீர்மானம் எண்.368 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 14**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 4–வது வார்டில் காரிதாஸ் காலனியில் கதவு எண்.4/572–ன் மீது வரி நிலுவைத் தொகை இருந்த காரணத்தினால் 27.03.2012 அன்று குடிநீர் குழாய் இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டது. தற்போது மனுதாரர் நிலுவைத் தொகை முழுவதையும் செலுத்தி விட்டு மீண்டும் இணைப்பு வழங்க கோரியுள்ளார். எனவே மனுதாரர் வேண்டுகோளை ஏற்று துண்டிக்கப்பட்ட குடிநீர் குழாய் இணைப்பை மீண்டும் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.3449/2012/இ2 )

**தீர்மானம் எண்.369 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் உள்ள 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு உடைய இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளிலும் தொட்டியை சுத்தம் செய்கிற 4" Cleaning valve பழுதடைந்துள்ளதை மாற்றி புதிய வால்வு இரண்டு அமைப்பதற்கும், மேலும் கள்ளியடைப்பில் பழுதடைந்த 4" Sluice valve மாற்றுவதற்கும், Slaughter house–ன் முன்னால் 2" Sluice valve புதியதாக அமைக்கவும், பர்னட்டிவிளையிலிருந்து பாலத்தன்கரை செல்லும் திருப்பில் இரண்டு 2" Sluice valve புதியதாக அமைக்கவும், பூக்குழியில் Orient School அருகில் தெருவில் உள்ள மக்களுக்கு 2" பகிர்மான குழாய் அமைத்து 2" Sluice valve அமைப்பதற்கும், மேலும் ஏசுதாஸ் காலனியில் உள்ள இரண்டு தெருக்களில் ஒரு தெருவில் தண்ணீர் அதிக அழுத்தமாக செல்வதால் 3" Sluice valve அமைத்து Control செய்வதற்கும், மேலும் CMC. காலனியில் பழுதடைந்துள்ள 5" Sluice valve –ஐ மாற்றுவதற்கும், மேலும் மாதாகாலனி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு செல்லும் 4"பம்பிங் லைனில் அடிக்கடி உடைவு ஏற்படுவதால் 4" Air valve அமைக்கவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 86,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.3459/2012/இ2 )

**தீர்மானம் எண்.370 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 16**

இந்நகராட்சிக்குட்பட்ட உரக்கிடங்கு பகுதியின் கொள்ளளவு மிகவும் சிறியதாக உள்ளதாலும், மேலும் குடியிருப்புகளுக்கு அருகாமையில் அமைந்துள்ளதாலும், எளிதில் மக்குவதற்கும், துர்நாற்றம் வீசாமல் தடுப்பதற்கு குப்பைகள் கொட்டும் இடத்தில் தெளிக்கும் E.M.No.1 உயிர்த்திரவம் மருந்து தற்போது இருப்பில் இல்லாததால் E.M.Stock Solution Sri Ram Biotech, கோயம்புத்தூர் நிறுவனத்தில் இருந்து வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.3702/2009/எச்1)

**தீர்மானம் எண்.371 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 17**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் கடலில் கடந்து கடல்நீர் மாசுபடுவதாக பொதுமக்களிடமிருந்து புகார்கள் வரப்பெற்றுள்ளதாலும், கடல், ஆறு, ஏரி, குளம் போன்ற நீர்நிலைகளில் கழிவுநீரை நேரடியாக விட்டு மாசுப்படுத்தாமல் சுத்திகரித்து விட வேண்டும் என உச்சநீதிமன்ற தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாலும், இந்நகராட்சிக்குட்பட்ட இரண்டு பகுதிகளில் சுத்திகரிப்பு தொட்டி அமைத்து கழிவுநீரை Root Zone Method மூலம் சுத்திகரித்து 8'' PVC குழாய் மூலம் கடலில் சேர்ப்பதற்கும், மீன் ஏலமிடும் தளத்திலிருந்து வெளியேறும் கழிவுநீரை சுத்திகரித்து குழாய் மூலம் கடலில் சேர்ப்பதற்கும், மேலும் மீன் ஏலம் போடும் தளத்தின் அருகிலுள்ள தெருவில் கழிவுநீர் வெளியேற முடியாமல் தேங்கி நிற்பதால் அதனை சரி செய்வதற்கும் ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.3,20,000/–க்கு பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று 24.08.2012–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.R.தேவராஜ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.28% குறைவு.<br>(ரூ.3,05,117/– ) |
| 2. | திரு.பி.தங்கமணி,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.37% கூடுதல்.<br>(ரூ. 3,07,107/– ) |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.28% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.R.தேவராஜ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.3219–1/2012/இ1 )

**தீர்மானம் எண்.372 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 18**

இந்நகராட்சிக்குட்பட்ட 19–வது வார்டில் முருகன்கோவில் தெருவில் அமைந்துள்ள வடிகால் ஓடையின் பக்க சுவர்கள் செங்கற்களால் கட்டப்பட்டதால் பக்க சுவர் வடிகால் ஓடையின் உள்ளே விழுந்துள்ளது. இதனால் கழிவுநீர் வெளியேற முடியாமல் தேங்கி நிற்கிறது. மேலும் ஓடையின் மேல்மூடி உடைந்துள்ளதால் கொசு தொல்லை அதிகமாக உள்ளதாக பொதுமக்களிடமிருந்து புகார்கள் வரப்பெற்றுள்ளது. எனவே பொது சுகாதாரம் மற்றும் பொதுமக்களின் நலனை கருத்திற் கொண்டு மேற்படி தெருவில் மூடியுடன் கூடிய வடிகால் ஓடை அமைக்கவும், அருகிலுள்ள குறுக்குத் தெருவில் சிமெண்ட் தளம் அமைக்கவும் ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.5,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.2601/2012/இ1 )

**தீர்மானம் எண்.373 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 19**
**இந்நகர்மன்ற உறுப்பினர் திரு.என்.முகம்மது தாசீம் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்.**

இந்நகராட்சிக்குட்பட்ட 3—வது வார்டில் அமைந்துள்ள குளச்சல் கடை என்றும், பழைய குளச்சல் கடை என்றும் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படும் பகுதிக்கு தமிழகத்தின் முன்னாள் முதல்வர், திராவிடர் பேரியக்கத்தின் பெரும் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரை சூட்டி அண்ணாநகர் முதல் தெரு என்றும், குமார் டிராவல்ஸ் உரிமையாளரின் வீட்டிற்கு செல்லும் தெருவிற்கு அண்ணாநகர் இரண்டாவது தெரு என்றும் பெயர் சூட்ட நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்.374 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி